தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2022 கும்பம்/மீனம் (31-12-90) ஓர் உருபா (இதழ் எண்: 143)

இராசீவ்,செயலலிதா-இருவரும் வெறுப்புற்ற அரசியலால் நாட்டைக் கெடுக்கிறார்கள்!

சந்திரசேகர் இராசீவின் பகடைக்காய் என்றால் இராசீவ் செயலலிதாவின் பகடைக்காய்!

செயலலிதாவிற்கு அரசியல் நலன்கள் பற்றிக் கவலையில்லை; தனிப்பட்ட விருப்பு, வெறுப்பும் பதவிப் பித்துமே அவரின் அரசியல் விளையாட்டுகள்!

தமிழினத்தின் முதல் பகை செயலலிதா? இரண்டாம் பகையே இராசீவ்! இருவருக்கும் 'அரசியல் மாமா'வாகச் செயல்படுகிறார் வாழைப்பாடி!

இம் மூவரையும் அரசியல் களத்திலிருந்தே அப்புறப் படுத்த வேண்டும்!

கலைஞரின் அரசியல் வீழ்ச்சிக்கு, அவரின் தொலைதூரப் பார்வையுடன் கூடிய இனக்கவலையற்ற ஆடம்பர, ஆரவார, விளம்பரத் தனமான செருக்கே காரணம்! அவரின் வலிவுகளே அவர்க்கு மெலிவுகள்!

தமிழர்கள் எதிரியினத்தவரை விடத், தன்னினத்தவரிடமே அதிக விழிப்பாயிருத்தல் வேண்டும்!

(தொடர்ச்சி-3ஆம் ப

Scanned with CamScanner

பசுமை நினைவுகள்!

-பறம்பை அறிவன்-

24-11-90: புதுகையில் இனிய இளவல் வினைதீர்குன்றனைக் கண்டேன்—அன்பினிய அவர் தம் துணைவியார், மகவு ஐங்குழலி—யாவரும் விருந்தோம்பும் இயல்பினர். திரு. இராமதாசு அமைதியும் உழைப்பும் மிக்கவர். தமிழியக்கம் வழியே உ.த.மு.க.வின் தூயதமிழ்த் தொண்டியற்ற உதவுவதாய்க் கூறினர். தோழர். கு. தருமலிங்கம் மக்கள் கல்வி இயக்கமும், உ.த.மு.க.வும் தமிழ்வழிக் கல்வி தமிழகத்தில் உருவாகிட ஒத்துழைப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். அவரோடு, அழகுநிலவனாரைக் காணச் சென்றோம். அவர் தம் திருமணம் பாவலரேறு தலைமையில் நிகழ்ந்ததை நினைவு கூர்ந்தார். காலச் சுழலில் உறுதியான தமிழ் மீகான்களென விளங்கும் அன்பர்களைக் கண்ட மகிழ்வு நெஞ்சில் இன்ப அலையானது!

25-11-90: கடலூர், பெருந்தை விட்டிறங்கியதும் கொட்டு(ம்)மழை எங்களை வரவேற்றது. நகரவைக் கூடம் மழையால் 'தொப்பென்று' நனைந்திருந்தது. 'ஒடுக்கும் சாதியை ஒழிப்போம்' என இளைஞர்கள் திரண்டிருந்தனர். கூட்டம் கலந்துரையாடல், ஆய்வுரை என நடந்தது. அழுத்தமான தொண்டுணர்வும் ஆரவாரமற்ற கருத்துரைகளும் இளைஞர்களிடமிருந்து வெளிப்பட்டன.

இளைஞர்கள் பேச்சில் எழுச்சி வேண்டும். பேச்சை அமைத்துக் கொள்ளும் முறை, தலைப்பிலிருந்து விலகாமல் பேசும் பயிற்சி வேண்டும் என மானமிகு. விழுப்பரையன் கூறினர். அவர் தம் துணைவியாரை இழந்த துயர் கேட்டு, ஆறுதல் மொழிந்தேன்.

பாவலரேறு வந்தார். அவர் தம் ஆன்றோய்ந்து பேசும் பொழிவைக் கேட்க வாய்ப்பின்றி ஊர் திரும்பி விட்டேன். தோழர்களின் சந்திப்புக்கிடையே பெற்ற உணர்ச்சிகள்

"எழுத வேண்டும்;" "பேச வேண்டும்;" "இயங்க வேண்டும்" என்பனவே!

மக்கள் கல்வி இயக்க அமைப்பாளர் பா. கல்யாணியை உதகைக்கு மாற்றிவிட்டனர். முன்பு அவர் 'மகளிர்க்குப் பள்ளிக்கூடம்' கேட்டுப் போராடியதற்காக 'ஊதிய உயர்வை' இழந்தார். இப்போது, தாய்மொழிக் கல்வி தமிழ் வழிக் கல்வி கேட்டு இயக்கஞ் செய்வதற்காக 'மாறுதல் உத்தரவு' நேர்மை, ஞாயம் வேண்டிப் போராடும் தலைமைகளை 'அரசு'ம் 'அதிகாரிகளும்' தொல்லைகள் தருவதும் கொடுமைப் படுத்துவதும் நடைமுறையில் உள்ளதுதான்!

26-11-90: உ.ச.எழில் எதிர்பார்த்தபடி போய்ச் சந்தித்தேன். தமிழ் மீதும், தமிழின முன்னேற்றத்தின் மீதும் ஈடுபாடுடைய இவர், 'என்னியக்கத்தின்' தூண்டுகோலாக உள்ளார்.

27-11-90: 'தமிழ்த் தேசம்' (TAMIL NATION) என்ற ஆங்கில இதழ் வந்தது. இதன் கண் இலகும் செய்தி தமிழின எழுச்சிக்குத் துணிபுரியும். தோழர். கி பால்ராசு 'கிழக்கு' என்னும் இதழை வெளியிட்டுள்ளார். மார்க்சிய இலெனினிய அறிஞரான இவர் பண்பு நலமும் புரட்சியுணர்வும் எனக்குப் புத்துயிர்ப்பு பெற உதவின!

'கிழக்கு,' சாதியமைப்பின் தகர்வையும், 'பல சாதி'யினர் இணைந்து செயல்படும் நிலைமைகளையும் சுட்டிக் காட்டும் 'அரசு' எழுதிய கட்டுரையை வெளியிட்டுள்ளது. சாதியின் உள்ளுடைவு, இணக்க நடவடிக்கை 'தேசிய இன உணர்வெழுச்சி'யின் அடையாளங்கள் என்றே கருதுகிறேன். 'பஞ்சாப்' பற்றிய கட்டுரைத் தொடர் புதிய விளக்கங்களை வழங்கி நிற்கிறது. காந்தியாரின் 'மென்முறை'க் கொள்கை, மக்களின் உறுதியான போராட்டத்தைக் கொச்சைப் படுத்தும் வகையில், 'மறைமுக வன்முறை' என்கிறது.

28-11-90, 'மியான்மார்' (பர்மா) மக்கள் போராட்டம், படை ஆட்சி மூலம், ஒடுக்கப்படுவதைத் 'தினமணி' ஆசிரியவுரை எழுதியுள்ளது.

29-11-90: சாதியின் கட்டமைப்பு தகர்ந்து தேசிய இனவுணர்வு வளர்தல் வேண்டும். இன, மொழி எல்லாம் கடந்த கற்பனை உலகில் மக்களை மிதக்க விடும். பேச்சும், எழுத்தும் திட்டவட்டமான செயல் முயற்சிகளை மழுங்கப் பண்ணுவன என்று கருதுகின்றேன். O

வெளிவந்துவிட்டது!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

அரிய கருத்துரைகள் அடங்கிய கருவி நூல்!

தமிழீழப் போராட்டத்தின் முழுவடிவமும், போராளிகளின் முயற்சிகளும், சிங்கள, இந்திய அரசியல் சூழ்ச்சிகளும் உள்ளடங்கிய அரிய நூல்!

தமிழீழம்

(போராளிகளும், போராட்ட முயற்சிகளும்)

1970 முதல் இதுவரை ஆசிரியர் தென்மொழி, தமிழ்நிலம் ஆகியவற்றில் அவ்வப் பொழுது எழுதிய அரிய கட்டுரை, பாடல்களின் தொகுப்பு! ஏறத்தாழ 550 பக்கங்கள் கொண்டது!

55 உருபா மதிப்புள்ள நூல்! முழுத்தொகையுடன் அஞ்சல் செலவு 5 உருபாவும் அனுப்பி வைப்பவர்களுக்கு நூல் உடனே (Recorded Dely.) பதிவுக்கொடுப்பஞ்சலில் அனுப்பி வைக்கப் பெறும். முன்பே 35 உருபா விடுத்தவர்கள், மேலும் உரு 25 விடுக்கவும்.

Scanned with CamScanner

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

'தமிழ் நாட்டில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்படாது' என்று கூறிக் கொண்டே வந்து, இறுதியில் தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவந்தே விட்டனர்.

மாநில ஆட்சிக் கலைப்பு என்னும் வல்லதிகாரச் சட்டம் 356 என்னும் பிரிவு இருக்கும் வரை அதை நடைமுறைப் படுத்தித் தங்கள் அதிகாரத்தை, ஆட்சித் தலைமையிடத்திற்கு யார் வந்தாலும் செயல்படுத்தியே தீர்வார்கள் என்பது மேலும் மேலும் உறுதி செய்யப்பெற்றே வருகிறது.

இந்தியா உரிமை பெற்ற பின் முதன் முதல் சவகர்லால் நேருவின் காலத்திலேயே 1951 சூன் 16-இல் பஞ்சாபில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொணரப்பட்டது. அதன் பின்னர் இந்திரா காலத்திலும் சனதா ஆட்சி, இராசீவ் ஆட்சிக் காலங்களிலும் அந் நடைமுறை தொடர்ந்து கடைப் பிடிக்கப் பெற்றது. 1966-இல் மீண்டும் பஞ்சாப், 1973-இல் ஆந்திரம், 1973,75-இல் இருமுறை உத்திரப் பிரதேசம், 1976-இல் ஒரிசா, 1989-இல் கருநாடகம், 1990-இல் மீண்டும் கருநாடகம்-என்று பல முறைகள் தில்லியரசு மாநில அரசுகளைக் கலைத்துக் குடியரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப் படுத்தி வந்திருக்கிறது. தமிழகத்தில் மட்டும் 1976-இல் கருணாநிதி ஆட்சியும், 1980-இல் ம.கோ.இராமச்சந்திரன் ஆட்சியும், 1988-இல் சானகி இராமச்சந்திரன் ஆட்சியும், இறுதியில் 1991 சனவரி 30-இல் மீண்டும் கலைஞர் ஆட்சியும் இவ்வாறு கலைப்புக் குள்ளாகிக் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப் படுத்தப் பெற்றுள்ளது.

எனவே, ஆட்சிக் கலைப்பு என்பது தில்லிக்கு, சட்டத்தின்—அதிகாரத்தின் பெயரால் ஓர் அரசியல் விளையாட்டாகப் போய்விட்டது. தில்லி நாற்காலியில் யார் அமர்ந்தாலும், அல்லது குடியரசுத் தலைவர் நாற்காலியில் எத்தனைப் பெரியவர் ஆட்சியில் அமர்ந்திருந்தாலும், ஞாயம் என்பதை விட, சட்டஅதிகாரம் எனற வகையில் ஆட்சிக் கலைப்பு என்பது இயல்பாகி விட்டது.

மக்களால் முறைப்படி, தேர்தல் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பெற்ற ஓர் ஆட்சியைக் கலைப்பது என்பது 356 அரசு அமைப்பியல் சட்டப்படி எந்த வகையான தங்கு தடையுமின்றிச் செயல் படுவது மக்கள் அரசுக்கே, குடிநாயகத்திற்கே இழுக்குத் தருவதும், இழிவு செய்வதுமாகும்.

எஃது எவ்வாறாயினும் குடியரசுத் தலைவர் உள்பட ஆட்சிக்கு வரும் அனைவருமே ஞாயமான—நேர்மையான—உண்மையான மக்கள் நலம் கருதுகிறவராக இருப்பதில்லை என்பது முற்றிலும் உண்மையாகி விட்டது.

முறைப்படி தேர்தல் நடந்து ஆட்சிக்கு வந்த ஓர் ஆட்சி, ஏதோ ஒரு காரணத்தால் கலைக்கப் படுவதும், மீண்டும் தேர்தல் நடத்தி மீண்டும் ஒரு கட்சியை ஆட்சியில் அமர்த்துவதென்பதும் வெறும் அரசியல் பகடி (கேலி)க் கூத்தாகி விட்டது. தேர்தல் என்பதற்கும் ஒப்போலை என்பதற்கும் கள்ள உருபாத் தாள்களுக்குள்ள மதிப்புத்தான் என்பது மெய்ப்பிக்கப் பட்டுவிட்டது. செல்லும் வரை செல்லும். செல்லாவிட்டால் புறக்கணிக்கப் படும்—என்பதே அதற்குப் பொருளாகி விட்டது.

ஒரு தேர்தல் நடப்பதற்கும் ஓர் அரசியல் கட்சி ஆட்சியமைப்பதற்கும் இடையில் எத்தனைப் பொறுப்பான பணிகள்! அவற்றுக்கு உட்படுத்தப் படும் மாந்த ஆற்றல்கள் எத்துணை! பொருட் செலவு எத்தனைக் கோடிகள்! அவற்றின் அரசியல், பொருளியல், குமுகாய மதிப்புகள் எவ்வளவு? ஆனால் இத்தனையும் ஓர் ஆட்சிக் கலைப்பின் அடிப்படையில் பொருளற்றவையாகி விடுகின்றன என்றால், குடியரசு அமைப்புக்கே பொருளில்லாமல் போய்விட்டது என்பது உண்மையாகி விடும்.

தில்லியில் எத்தனையோ தில்லுமுல்லுகள் செய்தும், கோடி கோடியாய்ப் பணம் செலவழித்தும் தலைமையமைச்சர் பதவிக்கு வந்து விடும் ஒருவர், இந்தியாவில் உள்ள எண்பது கோடி மக்களும் வெறுக்கின்ற அல்லது விரும்பாத ஒரு செயலைச் செய்கின்றார் என்றால், அதற்குச் சட்ட இசைவு உண்டெனறால், இந்த அமைப்பியல் சட்டம் எதற்கு? குடியரசுத் தலைவர்தாம் எதற்கு? எல்லாமே ஒரு நாடக உத்திதான் என்றாகி விடாதா?

இந்த வகையில் இந்திய அமைப்பியல் சட்டத்தில் உள்ள 74-ஆவது பிரிவின்படிகூட, குடியரசுத் தலைவர் ஒருவர் நடுநிலையான சிந்தனையுடன் செயல்பட மறுக்கின்றார் என்றால், இந்திய அரசியல் நடைமுறைகளை என்னவென்று இகழ்ந்துரைப்பது?

தி.மு.க. ஆட்சிக் கலைப்பு சரியா சரியில்லையா என்று ஆய்வதற்கு முன், இந்திய ஆட்சியமைப்பே சரியில்லை என்ற முடிவுக்குத்தான் நாம் வர வேண்டியுள்ளது.

எப்படியோ அனைவரும் அச்சத்துடனும், ஐயத்துடனும், எதிர்பார்த்த தி.மு.க. ஆட்சிக் கலைப்பு நடந்தே விட்டது. இதன் முழு இழப்பும் மக்களுக்குத்தான். முழு ஊதியமும் செயலலிதாவுக்கும், இராசீவுக்குந்தாம்! இருவரும் வெறுப்படைந்த அரசியல் காரர்கள்! என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிந்தவர்கள் அவர்கள்! அவர்கள் முன்னிலையில் இந்தியத் தலைமையமைச்சரும், ஏன் குடியரசுத் தலைவரும் கூட வெறும் தலையாட்டிப் பொம்மைகளே!

தூ! இந்த மானங்கெட்ட அரசியலைப் பற்றியும் அரசியல் கட்சிகளைப் பற்றியும் பேசவும் எழுதவுமே வெட்கமாயிருக்கிறது! இன்னும் படிப்படியாகப் பிறகு சிந்திப்போம்! O

Scanned with CamScanner

உரிமை பெற்ற 43 ஆண்டுகளுக்குப் பின் இன்றுள்ள இந்தியாவின் நிலை!

இந்தியா உரிமை பெற்று 43 ஆண்டுகளாகின்றன. 84 கோடி மக்கள் இங்கு வாழ்கிறார்கள். இவர்களுக்கிடையில் 12 மதங்கள், 15 பெரிய மொழிகள். 250 கிளை மொழிகள். இருப்பினும் இன்னும் ஆங்கிலமே நாட்டின் இணைப்பு மொழியாக நீடித்து வருகிறது. இது போல் பிரிட்டிசு சட்ட முறையே நாட்டின் பொதுவான சட்டமுறையாக இருந்து வருகிறது.

போலிச் சமநிலைகள்:

இந்தியாவில் பேசப் பெற்று வரும் ஒருவகைச் சமநிலை(சோசலிச)க் கொள்கை ஓர் ஏமாற்றுக் கொள்கை; பணக்காரர்களிடமிருந்து ஏழைகளுக்குச் செல்வத்தை மாற்றுவதற்குப் பகரமாக, நேர்மையான பணக்காரர்களிடமிருந்து, நேர்மையற்ற பணக்காரர்களுக்கு மாற்றவே இந்தச் சமநிலைக் கொள்கை உதவுகிறது'' என்று பிரிட்டனிலிருந்து வெளிவரும் 'பொருளியலாளன்' (Economist) என்னும் இதழ் 1987-இலேயே குறிப்பிட்டுள்ளது.

தொழில் நிலையில் வறட்சி:

இங்கு 231 தொழில் நிறுவனங்களை நடுவணரசும், 636 தொழில் நிறுவனங்களை மாநில அரசுகளும் நடத்துகின்றன. இவை 'பகாசுரனை'ப் போல் பொதுப் பணத்தை விழுங்குகின்றன. வறட்டுச் 'சோசலிச'த்தின் பெயரால் மக்களைக் கடுமையாகச் சுரண்டுகின்றன.

அதிகமும் குறைவும்:

அதிகமான அரசுத் தலையீடும் குறைவான ஆட்சித் திறனும், அதிகமான சட்டங்களும் குறைவான அற நிலையும், அதிகமான (பொது) அரசு ஊழியர்களும் குறைவான பொதுநலத் தொண்டும், அதிகமான கட்டுப்பாடுகளும், குறைவான நல்வாழ்வு வசதியும்-என்னும் நிலைமைகளே இந்தியாவில் வேரூன்றி உள்ளன.

நாட்டின் பொருளியல் சீர்குலைவு:

இசைவு (Permit,) உரிமம் (Licence), பங்கு ஒதுக்கீடு (Quota) என்னும் சுமைகள் நாட்டின் பொருளியலையே அழுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆட்சிமுறைச் சீர்கேடுகள்:

ஒரு நூற்றாண்டுக்கு முந்தைய சிவப்பு நாடா ஆளுமை முறையை அரசு இன்னமும் பின்பற்றுகிறது. கோப்புகளும் குறிப்புகளும் இலக்கு எதுவும் இல்லாமல் சக்கரம் போலச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. அக் காலத்தை விடக் கோப்புகளின் எண்ணிக்கை ஆயிரம் மடங்கு அதிகரித்திருக்கிறது. அதிகாரக்காரர்களின் நெறிமுறைகளால அளவற்ற நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது.

அறமன்றங்களின் அவல நிலை:

அறமன்றத்தின் மூலம் தீர்வு தேடுவது என்பது நேரத்தை விழுங்கும் செயலாக உள்ளது. 18 உயரற மன்றங்களில் ஏறத்தாழ 20 இலக்கம் வழக்குகளும், உச்ச அறமன்றத்தில் 2,10,000 வழக்குகளும் அனுமதியையோ, தீர்ப்பையோ எதிர் பார்த்துத் தேங்கிக் கிடக்கின்றன.

குடியரசின் மாபெரும் தவறு:

செங்கல், சுண்ணாம்பு, இயந்திரங்கள், தொழிற்சாலைகளில் ஈடுபடுத்தியதை விடக் குறைவான விடுமுதலே மாந்த ஆற்றல் மேம்பாட்டுக்குக்—கல்வி, குடும்பக்கட்டுப்பாடு, ஊட்டச் சாரம்—பொது நலம்—முதலியவற்றில் ஈடுபடுத்தப் பட்டுள்ளது என்பது, கடந்த 40 ஆண்டுகளில் இந்தியக் குடியரசு செய்த மாபெரும் தவறு ஆகும்.

பண்பொழுக்கச் சீர்குலைவு:

பொருள்களின் உருவாக்கம் (உற்பத்தி) உயர்ந்ததே தவிர, தரம் உயரவில்லை; மக்களின் நல்வாழ்வு உயரவில்லை; அடிப்படை வசதிகள், கலை, பண்பு ஒழுக்கங்கள் ஆகியவை தொடர்பாக, நாட்டின் பல்வேறு பகுதிகள், பல்வேறு நூற்றாண்டுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

பின்தங்கிய கல்வி நிலை;

இப்போதைய அஞ்சத் தகுந்த வேகத்தில் மக்கள் தொகை பெருகிக் கொண்டிருந்தால் வாழ்வின் தரம் உயர முடியாது. பொருளியல் மேம்பாடே சிறந்த கருத்தடைக் கருவி என்று சொல்லப்படுகிறது. ஆனால், இப்போதைய மக்கள் பெருக்க வேகத்தில் பொருளியல் வளர்ச்சி வாய்க்காது. கல்வி—குறிப்பாகப் பெண்கல்வி மற்றொரு கருத்தடைக் கருவி. ஆனால், இன்றைய நிலையில் இந்தியாவில் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இருபங்கினரும், பெண்களில் ஐந்தில் நானகு பங்கினரும், எழுத்தறிவில்லாமல் இருக்கின்றனர். இந்த நூற்றாண்டின் இறுதியில் எழுத்தறிவற்ற உலக மக்களில் 54 விழுக்காட்டினர் இந்தியாவில் இருப்பர் என்று உலக வைப்பகம் மதிப்பிடுகிறது.

மிகுதியான வரி விதிப்பின் விளைவு:

உலகிலேயே மிக அதிகமான வருமான வரிக்கும், செல்வ வரிக்கும் பல ஆண்டுகளாக ஆட்பட்டிருந்தோம். பிற்போக்கு வரவு செலவுத் திட்டங்கள் (Budget) வரிசையாக வந்தன. அளவு மீறிய வரி போடுதல் காரணமாக, மக்கள் வரி ஏய்ப்பில் இறங்கினர். இது நாட்டின் பண்பைத் தாக்கியது.

வறுமையே வாழ்க்கை:

உலக மக்களில் 15 விழுக்காட்டினர் இந்தியாவில் வாழ்கின்றனர். ஆனால் உலக வருவாயில் 1.5

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

சிம்ரஞ்சித் சிங் மானின் தன்மானக் கோரிக்கைகள்!

கடந்த திசம்பர் 28-இல் தலைமையமைச்சர் சந்திரசேகரிடம் அகாலிதளம் (மான் பிரிவுத்) தலைவர் **சிம்ரஞ்சித் சிங் மான்** அவர்கள் கொடுத்துள்ள கோரிக்கை அறிக்கையில் கிழ்வருமாறு கருத்துகளை முன்வைத்துள்ளார்.

"இந்தியா ஒப்புதலளித்துள்ள அனைத்து நாட்டுக் கூட்டங்களில் தன்னுறுதி (சுயநிர்ணய) உரிமை(Self-Determination) இடம் பெற்றுள்ளது. இதன் அடிப்படையில்தான் சீக்கியர்கள் இந்திய ஒன்றிய ஆட்சியுடன் இணைய ஒப்புதல் அளித்தார்கள்

கடந்த பல ஆண்டுகளாக இந்திய அரசின் அடக்குமுறை,வேறுபாடான போக்கு ஆகியவற்றினால் தாக்கம் அடைந்ததையடுத்து, அந்த உரிமையைப் பெற சீக்கிய இன மக்கள் விரும்புகிறார்கள்.

பஞ்சாபுக்கான வேறுபாடான பல சட்டங்களை இயற்றியதன் மூலம் சட்ட முறையாகவே பஞ்சாப் ஒரு தனி அமைப்பு என்பதை நாடு ஒப்புக்கொண்டு விட்டது.

சீக்கிய இனம் ஒரு சிறிய சிறுபான்மை இனம் என்ற போதிலும், இந்திய மக்களின் விடுதலைக்காக அது பெரும பங்கு ஆற்றியுள்ளது. பேராய (காங்கிரசு)க் கட்சியிடமிருந்து உரிய, உயரிய உறுதி மொழிகளைப் பெற்று, அவற்றைப் பிரிட்டிசு அரசு ஏற்றுக் கொண்ட பின்னர்தான் இந்தியாவுடன் இணைய சீக்கியர்கள் உடன் பாட்டார்கள்.

'இந்தியாவின் எதிர்கால அரசின் அமைப்பியல் சட்டத்தில், சீக்கியர்களுக்கு சிறப்பு உரிமைகளும், சலுகைகளும் அளிக்க வகை செய்யப்படும்' —என்ற தெளிவான நம்பிக்கையின் அடிப்படையில்தான் இந்தியாவிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படுகிறது' என் 1947-ஆம் ஆண்டு உரிமை வழங்கு சட்டத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆனால் பஞ்சாப் மற்றும் சீக்கியர்களைப் பொறுத்த அளவில் உறுதி மொழிகள் மறுக்கப்பட்டு வந்துள்ளன என்பது தான் வரலாறு.

சீக்கியர்களுக்கு உடன்பாடில்லாத அரசியல் அமைப்புச் சட்டம் எதுவும் உருவாக்கப் பட மாட்டாது என்பது—1929-ஆம் ஆண்டு இலாகூரில் நடந்த பேராயக் கட்சி மாநாட்டின் தீர்மானமாகும்.

1931-ஆம் ஆண்டு தில்லியில் சிசுகஞ்ச் குருத்வாராவில் சீக்கியர்களின் கூட்டம் ஒன்றில் பேசிய காந்தி, "தங்களுக்குப் பேராயக் கட்சி (காங்கிரசு) இரண்டகம் செய்யும் என சீக்கிய அன்பர்கள் அஞ்சத் தேவையில்லை" என்று கூறியுள்ளார்.

பொற்கோயிலில் படைத்துறை நடவடிக்கை எடுக்கப்பட்டதானது, இந்திய—சீக்கியச் சிக்கலில் ஒரு முகாமையான கட்டமாகும். இதனால் சீக்கியர்களுக்கு ஏற்பட்ட மனத்துயரம் மிகப் பெரியது.

அஞ்சத்தக்க கொடுமையாளர்கள் (பயங்கரவாதிகள்) என்று நாம் அழைக்கும் இளைஞர்கள் சீக்கியர்களுக்குத் தனி நாடு கோரி அன்றாடம் அரத்தம் சிந்தி வருகிறார்கள். இந்த நிலையில், தன்னுறுதி (உரிமையை) ஏற்றுக் கொள்ளாத எந்த ஓர் அரசியல் முறையையும் ஏற்றுக் கொள்ள சீக்கியர்கள் அணியமாக இல்லை.

தற்போதைய நிலையில் போராளி இளைஞர்களே முகாமையாக உறுப்பாண்மை பெறுகிறார்கள், எனவே அரசு பேச்சுரை நடத்த விரும்பினால், அவர்களுக்கு முறையாக அழைப்பு விடுக்கப்பட வேண்டும்.

படைத்துறையின் துமுக்கி (துப்பாக்கி) முனையில் பஞ்சாப் உள்ளது. சீக்கியர்களின் அமைதியான இயக்கங்களை நசுக்க, கொடிய சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

1984-இல் தில்லியில் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டார்கள். நாடாளுமன்றத்தில், 65-ஆவது, 76-ஆவது திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப் பட்டதன் மூலம், அரசியல் அமைப்பியல் சட்ட முறையாக நாடு இந்தியா, பஞ்சாப் என இரு பகுதிகளாகப் பிளவுபட்டுள்ளது. இந்தியாவின் 'குடியேற்ற நாடு' (காலனி) என்ற நிலைக்கு பஞ்சாப் தள்ளப்பட்டுள்ளது.

பஞ்சாபில் கடந்த 44 மாதங்களாகத் தேர்தல் நடத்தப்படவில்லை. பாக்கித்தான் தலையீடே இதற்குக் காரணம் என்று அரசு கூறுகிறது. ஆக, பஞ்சாபில் தேர்தல் நடத்துவது என்பது, அரசியல் அமைப்புக் குடிநாயகக் கோட்பாட்டைப் பொறுத்தது என்றில்லாமல், பாக்கிதானின் நல்லெண்ணத்தைப் பொறுத்த செய்தியாகி விட்டது. எனவேதான், உலக ஒன்றிய நாடுகள் அவையின் மேற்பார்வையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று பஞ்சாப் மக்கள் விரும்புகின்றனர்,

இந்தியா ஓர் இந்து தேசம் என்கிற கோட்பாட்டைப் பரப்புவதில் பல்வேறு இந்து அமைப்புகள் தீவிரமாக இறங்கியுள்ளன. இது நடைமுறைப் படுத்த பட்டால், சிறுபான்மை மக்களுக்கு ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்து நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது. பாபர் மசூதியை இடிக்கும்படி இன்று கூறும் பாரதீய சனதாவும், விசுவ இந்து பரிசத்தும் நாளை பொற்கோயிலை இடிக்கும்-

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

ஐரோப்பாவிலும் ஆரியமாயை அகன்றபாடில்லை!

த. அரிமா வளங்கோ.

தமிழ்நாட்டின் பட்டி தொட்டி எங்கணும் தந்தை பெரியார் கொட்டி முழக்கிய ஆரிய-திராவிடப் போராட்டம் இன்னும் தொடர்ந்து கொண்டுள்ளதைப் பார்க்கின்றோம். இனத்தால் ஒன்றுபட்ட மக்களைக் குலத்தாலும் மதத்தாலும் பிளவுபடுத்திக் கூறு போட்டு, ஆரியர் ஆடிக்-கொண்டிருக்கும் கூத்து இப்போது அனைத்துலகும் கண்டு சிரிக்கும்படியாக அம்பலத்திற்கு வந்து விட்டது.

எப்போதோ பரிந்துரைத்த மண்டல் குழுவின் அறிவுரைகளை இந்திரா காந்தி முதல் இராசீவ் வரையான ஆரியர் வெளியிடவும் தயங்கி, புதுப்-புதுக் காரணங்களால் இந்தியத் துணைக் கண்டத்தில், ஏமாற்றப்பட்டு — அதனால் தாழ்த்தவும் பிற்படுத்தவும் பட்டு விட்ட—மக்களிடம் கதை சொல்லி வந்ததை நாம் அறிவோம். தற்போது தேர்தலுக்கு உதவும் என்ற காரணத்தாலோ என்னவோ வி. பி. சிங் இதனை வெளியிட்டுள்ளார். இதன் எதிரொலி ஆரியர் "இராமனை" க் காட்டி - மதத்தைக் காட்டி, மக்களைத் திசை மாற்றி வருகின்றனர்; முதல் களப் பலி ஆரியரல்லாத வி. பி. சிங்தான்! சமய வேற்றுமை கருதாத கொள்கையைக் கொண்டிருப்பதாக நாக் கூசாது சொல்லி வரும் இராசீவும், சந்திரசேகரும் ஆட்சியைக் கைப்பற்ற ஆரிய வெறியாட்ட நேரத்தையே பயன் படுத்திக் கொண்டுள்ளதையும் பார்க்கிறோம். இருவரும் ஆரியர் என்பது குறிப்பிடத்தக்கது. (சந்திர சேகர் ஆரியரல்லர்; ஆனால் ஆரியச் சார்பானவர்—இதழாசிரியர்.)

இப்படி ஆரியரை எதிர்ப்பதாக ஆரியரே கரகாட்டம் ஆடிக் காட்டினாலும் அவர்களின் திருவுள்ளக் கிடக்கை என்னவோ ஆரியரைக் காத்துநிற்பதும் தமிழரை (திராவிடரை)க் காவு கொள்வதுமே உணரலாம்.

வளமிகுந்த பஞ்சாப்பைப் பிரித்துத் தங்களுக்கென "ஆரியானா" (ஆரியநிலம்) வை உண்டாக்கி கொண்டதோடு, சீக்கியம் ஒற்றுமை கொண்டு போராடித் தனி மாநிலம் கேட்பதை மதத்தின் பெயரால் தடுத்து, வன்முறைக்கும், படுகொலைகளுக்கும் கெடுபிடிக்கும் அம்மண்ணைப் பலி கொடுத்துவிட்டு, தங்கள் வலிவைப் பெருக்கி வருகின்றது ஆரிய இனம். இத்துணைக்கும் இந்திய மதச் சட்டத்தின் படி சீக்கிய மதம் இந்து மதத்தின் ஓர் உட்கூறு!

ஆண்டுதோறும் "இராமலீலை" என்னும் பெயரால் இந்தியத் தலைநகரான புது தில்லியில் குரங்கென்றும் அரக்கரென்றும் திராவிடரைச் சித்தரிக்கும் காட்சிகளை - மதத்தின் பெயரால் விழாக் கொண்டாடி-சமய வெறியை வளர்க்கின்றனர் ஆரியர். இவ் விழாவின் சிறப்பு நிகழ்ச்சி இராவண்ணனை எரியூட்டிக் கொல்லும் நிகழ்ச்சியாகும். நேரு முதல் பல ஆரிய - இனத்தலைவர்களே "இராமயணம் கூறுவது ஆரிய – திராவிடப் போராட்டத்தின் பகுதி களையே" என்றும், "குரங்குகளாகவும் "அரக்கர்களா"கவும் திராவிடர் களையே குறிக்கப்பட்டுள்ளது என்றும் கூறி வந்துள்ளனர். அவர்கள் ஆளும் பகுதியில் திராவிடரை இழிவுபடுத்தும் இந் நிகழ்ச்சி ஆண்டுதோறும் மதத்தின் பெயரால் நடப்பதை மட்டும் யாரும் தடுப்பதில்லை; தடுக்க எண்ணுவதுமில்லை.

இராமன் கருப்பன் என்பதும் அவன் வட திராவிட அரசனே என்பதும் ஆராய்ச்சி அறிஞர்களின் துணிபு ஆகும். இன்று, வெறிபிடித்தாடும் ஆரியக் கொலைஞர்களுக்கு இராமனுக்குக் கோயில் கட்டும் திருப்பணி (!) ஒரு கருவியாகவும் பழி தீர்க்க உதவும் பாசவலையாகவும் இருப்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவ்வண்ணம் இந்தியத் துணைக் கண்டமே ஆரிய - திராவிடப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதைப் போலவே, ஐரோப்பாவிலும் ஆரிய வெறி தலைதூக்கியே வருகின்றது.

இரண்டாம் உலகப் போருக்கு முன் மாக்சுமுல்லரால் செருமனியில் "ஆரியரே முதன் மக்கள்," என்னும் கருத்துப் பரவியது. இதை நடைமுறையில் செயலாக்க முனைந்தவனே இட்லர்! ஐரோப்பிய மொழிக் குடும்பங்களை "இந்தோ - ஐரோப்பிய மொழிகள்" என்று மாக்சுமுல்லர் வகைப்படுத்தினர். எனவே, இட்லரும் ஆரியத்தின் அடிமுடி தேடும் படலத்தில் இறங்கி, அக்கால வரலாற்றாசிரியர் தவறாகவும் தலைகீழாகவும் குறித்திருந்தபடி இந்தியாவே ஆரியரின் பிறந்தகம் என்று கொண்டு மயங்கினான். அதன் விளைவாக ,இந்திய ஆரியரின் வெற்றிக் குறியான சுவசுதிக் (SWASTIK) குறியை ஆரியக் குறியாக இட்லரும் ஏற்றான் ஆரியரல்லாதரையும் (யூதர், நாடோடிகள்) ஆரியரின் தலைமையை ஒப்புக்கொள்ளாத மக்களையும் இலக்கக்கணக்கில் கொன்று குவித்தான். ஒருவாறாக அவனுடன் அக்கொள்கையும் இரண்டாம் உலகப் போருக்குப்பின் மறைந்தது என்றே உலகம் கருதுகிறது.

ஆனால், பரவி வரும் நிறவெறிக் கொள்கையினரும், வெள்ளையரே மேல் என்று தென்னாப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் (இதனை அமெரிக்காவில் KU KLUX KLAN என்னும் அமைப்பு தன் கொள்கையாகவே கொண்டுள்ளது) சிறிது சிறிதாக ஐரோப்பிய நாடுகளிலும் ஆரியரே மேல் என்று காட்டும் இயக்கங்கள் வேரூன்றி வருகின்றன. GRACE என்னும் பெயருள்ள ஐரோப்-

Scanned with CamScanner

பிய இயக்கம் கல்வி, அலுவல், பதவி, அரசியல் ஆகியவற்றில் ஆரியரே மேலிடம் பெற அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி நிற்கின்றது என்று செய்தித்தாள்கள் கூறுகின்றன.

சரியாகவோ தவறாகவோ கற்றறிந்த யூதரின் மேலாளுமையைப் பொறுத்துக் கொள்ளவும், எதிர்த்துப் போட்டி போட்டு வென்று காட்டவும் இயலாத ஆரியர் இத்தகைய இயக்கங்களில் தங்களை இணைத்துக் கொண்டு ஆரிய இனம் காக்கப் பாடுபடுகின்றனர்.

அரபுகளின் கலப்பால் திரிபடைந்து விட்டதாகக் கருதப்படும் இசுபெயின், போர்த்துக்கீசியம், துருக்கி, சைப்ரசு, கிரேக்கம் முதலான நாட்டு மக்களையும், எல்லாக் கிழக்கு ஐரோப்பிய மக்களையும் (உருசிய வெள்ளை மக்களைத் தவிர) பிற வெள்ளையர் தாழ்வாகவே மதிக்கின்றனர்.

அமெரிக்காவைக் கண்டு- அதனைக் குடியேற்ற நாடாக ஆக்கி தற்போது 52% மக்கள் அமெரிக்காவில் (வெள்ளையர் + கறுப்பர் + கலப்பினத்தவர்) இசுப்பானிய மொழி பேசுவோராக இருந்த போதும் கூட இசுப்பானியர்களைத் தாழ்வான வேலைக்கு மட்டுமே செல்வ வளமிக்க(செருமானியம் பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாடுகள்) நாட்டார் வைத்துக் கொள்வதை உற்று நோக்க வேண்டும்.

கடலோடிகளான— அவர்களைப் போன்ற— போர்த்துக்கீசியரும் உலகமளாவிய பெரும் வல்லரசாக இருந்து தேய்ந்து விட்ட இந்நாளில் கட்டடம் கட்டுபவராகவும் ஆலைத்தொழில் அடிமையராகவும் அவர்களைப் பணக்கார ஆரிய நாடுகள் ஏற்கின்றன. கிழக்கு ஐரோப்பாவிலிருந்து பொதுவுடைமைப் பிடியிலிருந்து விடுபட்டு வருகின்ற போலந்து, பல்கேரியா,யூகோசுலோவோகியா, செக்கோசுலாவியா போன்ற நாட்டு மக்களை முரட்டு வேலைகளுக்கும் பட்டாளத்திற்குமே பயன்படுத்துகின்றன, தங்களை ஆரியராக இன்னும் கருதிக் கொண்டுள்ள பணக்கார நாடுகள்!

கிறித்தவர்களாக இருந்த போதிலும் ஆரியக் குடும்பங்களில் பழங்கால கிரேக்கப் பெயராகத் தேடித் தம் மக்களுக்குச் சூட்டுகின்றனர். கிறித்தவப் பெயர்களாக அறிமுகமாகிய பெயர்களை அவற்றின் யூத மொழி அடிப்படையின் காரணமாக வைப்பதில்லை.

இட்லரின் கட்டளைக்கேற்ப யூதர் முதலான வேண்டாத மக்களைக் காட்டிக் கொடுத்த நாடுகளில் செருமனிக்குப் பின் ஆத்திரியாவும், பிரான்சும், இங்கிலாந்தும், இத்தாலியும் குறிப்பிடத்தக்கன!

அஃதாவது, ஆரிய இனத்தையே முதல் இனமாக்க, தன் இனத்தைக் கலப்பின்றிக் காப்பாற்றும் பொருட்டு, பிற இனத்தவரைக் காட்டிக் கொடுத்த கயமைச் செயலை அன்றும் இன்றும் ஆரிய இன மக்களே செய்கின்றனர்.

நம் நாட்டுத் தினமணி, துக்ளக் செய்யும் வேலையுடன் இதனை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்க.

இந்தியா ஏவிய ஏவுகணைக்கு "ஆரியபட்டா" என்ற பெயர்(ஆரிய—இந்து) இந்திய ஆட்சியாளரால் தரப்பட்டது. ஐரோப்பியக் கூட்டு முயற்சியால்—பிரான்சின் குடியேற்றப் பகுதியான கயானாவில் உள்ள குரு என்னும் ஊரில் நிறுவப்பட்டு,—ஏவப்படுகின்ற ஐரோப்பிய ஏவுகணைக்கு "ஆரியன்" என்றே பெயர்!

பண்டை இந்திய ஆரியப் படை அணிவகுப்பு முறையில் கழுகுக்கு ஓர் உயர்ந்த இடம் தரப்படுகின்றது. கழுகுக் கொடியே இறுதி வெற்றிக்கான பதாகையாகும் என்று ஆரிய நூல்கள் கூறுகின்றன. ஈரானியர்களும் (ஆரியன் என்பதே ஈரானியன் என்றானதாகப் பாரசீகர் கூறுவர்),செருமானியர்களும், அமெரிக்கர்களும் கழுகையே தங்கள் இலச்சினையில் பொறித்து ஆட்சி செய்கின்றனர் என்பதையும் கவனிக்க வேண்டும்.

இவ்வாறு தங்களை இனங்காட்டிக் கொள்ளும் பலவகை நடைமுறைகளை ஆரியர் கையாண்டு, ஆளும் அதிகாரமும் கைநழுவிப் போகாமல் தங்களுக்குத் தாங்களே காவலாகத் துணைபுரிந்து ஆரியர் வாழ்கின்றனர்.

இட்லர் உலகையே பிடித்து விடக் கூடும் என்ற அச்சம் காரணமாக நம் நாட்டுப் பார்ப்பனச் சேரிகளில் எல்லாரும் செருமானிய மொழியை விழுந்து விழுந்து படித்த வரலாற்றை நாம் மறப்பதற்கில்லை.

இரண்டாம் உலகப் போருக்கு முன் இட்லரின் உறுப்புச் சிதைவுப் படைகளை நடத்திய ஒற்றருக்கும் தூதருக்கும்,உலகப் போர் முடிந்தவுடன் தென்னாப்பிரிக்காவிலும், அமெரிக்காவிலும், தென்னமெரிக்க வல்லதிகார நாடுகளிலும், உருசியாவிலும் தகுந்த பதவியும் ஊதியமும் தரப்பட்டுத் தொடர்ந்து இன்று வரை அவர்களைப் பழைய அதே கொலைவினைக்குப் பயன் படுத்தி வருகின்றனர்.

தற்போது செல்வமிக்க (ஆரிய) ஐரோப்பிய வல்லரசுகளில் நிறவெறிக் கட்சியினர் கணிசமாக இருந்து எத்தகைய ஆட்சி வந்தாலும், அதனை-நம் நாட்டுப் பார்ப்பனப் பதடிகள் போல- தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வதையும் கவலையுடன் நாம் நோக்க வேண்டியுள்ளது.

எனவே ஐரோப்பாவிலும் ஆரிய மாயை நச்சுச் செடியாக வளர்ந்த வண்ணம் உள்ளதே தவிர, கல்வியாலும் அறிவாலும் ஏன் சமயத்தாலும் கூட ஆரியமாயையை அகற்ற முடியாமல் உள்ளது என்பதையும் தமிழர் அறிந்து வைப்பது நல்லது. ○

Scanned with CamScanner

அறமன்றமும் நடுவர்களும்

தொலைபேசிக் கட்டண உயர்வை எதிர்த்து நுகர்வோர் ஒருவர் அண்மையில் சென்னை உயர்நெறி மன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்திருந்தார்.

அவர் தம் முறையீட்டில், அற மன்றத்தின் முதல் தீர்ப்பைக் குறை கூறி மேல் முறையீடு செய்திருந்தார். அம் முறையீட்டில் தனி நடுவர் ஒருவரின் தீர்ப்பைத் திறனாய்வு செய்து மேல் முறையீடு செய்திருந்தார். அதில் தமக்களிக்கப் பெற்ற தீர்ப்பைக் குறை கூறிக் கடுமையான சொற்களைப் பயன்படுத்தியிருந்தார்.

அம் முறையீட்டை, மேல் மன்ற நடுவர்கள் மிகக் கடுமையாகக் கண்டித்திருந்தனர். அதில், ''அறமன்ற நடுவர்கள் தவறே செய்ய மாட்டார்கள் என்று கூற முடியாது. அவர்கள் சட்டத்தின் அடிப்படையில் தங்களது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். வழக்காடும் இருவரில் ஒருவருக்கு அந்தத் தீர்ப்பினால் நிறைவு ஏற்படாமல் இருக்கலாம். அவ்வாறானால், அவர்கள் அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய உரிமை உண்டு. ஆனால் முன் தீர்ப்பு வழங்கிய நடுவரைக் குறை கூற அவருக்கு உரிமையில்லை'' என்று நடுவர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

அத் தீர்ப்பில், அந் நடுவர்கள், மேலும் கூறியிருந்ததாவது? ''பேச்சுரிமையும், கருத்துகளை வெளியிடும் உரிமையும் இருப்பதால், நடுவரைக் குறை கூறியும், அற மன்றத்தின் பெருமையைக் குறைக்கும் வகையிலும் பேசுவதை அனுமதிக்க முடியாது. இந்த வழக்கில் முறையீட்டாளர் தாமே அற மன்றத்தில் வழக்காடியுள்ளார். அவர் வழக்கறிஞர் அல்லர். மேலும் அவர் 70 அகவை ஆனவர். இல்லையெனில், அற மன்ற நடுவரைப் பற்றிக் கடுமையாகத் திறனாய்வு செய்ததற்காக அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்திருப்போம்'' என்றும் நடுவர்கள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

கடந்த 1988-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் தொலைபேசிக் கட்டணத்தை நடுவணரசு திடுமென உயர்த்தியதை எதிர்த்துத் தொலைபேசி வைத்திருப்போர் கழகத்தின் செயலாளர் பிரகாசம் என்பவர் சென்னை உயர் நெறி மன்றத்தில் உரிமை வழக்கு ஒன்றைப் பதிவு செய்ததின் அடிப்படையில், சென்ற திசம்பர் 8-ஆம் பக்கல் அதைத் தள்ளுபடி செய்த வழக்கில், உயர் நெறி மன்ற நடுவர்கள் ஏ.எசு.ஆனந்த், டி.இராசு ஆகியோர் அடங்கிய குழு இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

படி கோரலாம்.

பொருளியல் முறையாகவும் பஞ்சாபிடம் வேறுபாடு காட்டப் படுகிறது.

நடுவில் அனைத்து அதிகாரங்களையும் குவிக்கும் ஆவணமாக அரசியல் அமைப்பு மாறியுள்ளது. இது தவறான அரசியல் முறைக்கோ, வல்லாண்மைக்கோ அல்லது இரண்டுக்குமோ இட்டுச் செல்லும். இதற்கான அறிகுறிகளை இப்போது நன்றாகவே பார்க்க முடிகிறது.

எனவேதான், தங்களின் மத, அரசியல் மற்றும் பிற நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள சீக்கிய மக்கள் விரும்புகிறார்கள். தன்னுறுதி (சுயநிர்ணய) உரிமையைப் பெறுவதன் மூலமே இது இயல்வதாகும்'' —செய்தி. 'தினமணி' —1-1-91

தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு!

20-12-90 வியாழன் மாலை 6 மணிக்கு, சென்னை மயிலாப்பூரில் கற்பகம் உணவு விடுதியில் ''தமிழீழ விடுதலைப் போருக்கு ஆதரவளிக்கும் அரசியல் கட்சிகள், தமிழர் அமைப்புகள்'' ஆகியவற்றின் படிநிகராளிகள் கூடிய கூட்டத்தில், 'தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு' அமைக்கப்பட்டது. இதன் அமைப்பாளராக திரு. பழ.நெடுமாறன் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஒருங்கிணைப்புக் குழுவில் கீழ்க்காணும் அமைப்புகளின் சார்பில் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

திரு.பெ.மணியரசன்	-இந்திய மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி
திரு.தலித் எழில்மலை	-பாட்டாளி மக்கள் கட்சி
முனைவர் திரு.சாலையார்	-அறிவியக்கப் பேரவை
பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார்	-உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்
வழக்கறிஞர் திரு. இராமதாசு	-தமிழின விடுதலை கழகம்
திரு.சண்முகசுந்தரம்	-கர்நாடகத் தமிழர் பேரவை
கோவை திரு. இராமக்கிருட்டிணன்	-திராவிடர் கழகம்
பேரா.திரு. சுப.வீரபாண்டியன்	-விடுதலைக் குயில்கள்
திரு.தியாகு	-திலீபன் மன்றம்
செல்வி. நீலா	-அன்னையர் முன்னணி
திரு.ந.இளமாறன்	-பிரபாகரன் பாசறை
திரு.ஓ.சுந்தரம்	-விடுதலைப்புலிகள் தோழமைக் கழகம்
திரு.குணத்தொகையன்	-தமிழ்நாடு இளைஞர் பேரவை
திரு.பாவலர். தணிக்கைச் செல்வன்	-தமிழ்க்கலை இலக்கியப் பேரவை

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

Scanned with CamScanner

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழுக்காடுதான் நமக்குக் கிடைக்கிறது. உரிமை கிடைத்த கடந்த நாற்பது ஆண்டுகளில் தனியாள் வருமானம் இருமடங்காகக் கூட அதிகரிக்க வில்லை. 91 விழுக்காடுதான் (.91 மடங்குதான்) அதிகமாயிருக்கிறது. இன்னமும் உலகின் 21-ஆவது ஏழை நாடாகவே இந்தியா இருந்து வருகிறது. பேரளவு மாந்த ஆற்றலும் இயற்கை வளங்களும் கொண்ட இந்தியாவினால் எப்படி ஏழையாக இருக்க முடிகிறது என்று வெளிநாட்டினர் வியப்படைகின்றனர். இக்கேள்விக்கான சரியான விடை, 'நாம் பரம்பரை ஆண்டிகள் அல்லர், கொள்கையினால் ஆண்டியானவர்கள்' என்பதே!

வறுமையை நிலைப்படுத்துவதில் உலகிலேயே பெரிய திறமை சான்ற நாடுதான் இந்தியா என்று கூடச் சொல்லலாம் வெளிநாடுகள் எவ்வாறு வளர்ச்சி பெற்றுள்ளன என்பதை அறிந்து கொள்ளும் ஆசை இந்திய அரசியல்காரர்களுக்கும் அதிகாரக்காரர்களுக்கும் இல்லை.

இங்கு பெருவாரியான மக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். வேலையில்லாதோரின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ ஐந்து கோடி என்று மதிப்பிடப் பெறுகிறது.

ஏற்றுமதி இறக்குமதிக் கோளாறுகள்:

ஏற்றுமதி செய்யும் நாடுகளில் 16-ஆவது இடத்தை 1950-இல் இந்தியா பெற்றிருந்தது; இன்று 43-ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது! 1950-இல் உலக ஏற்றுமதிச் சந்தையின் இந்தியாவின் பங்கு 2.2 விழுக்காடாக இருந்தது. இப்போது 0.45 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இந்தியாவின் மக்கள் தொகையில் 0.7 விழுக்காட்டையும், நிலப்பரப்பில் 0.03 விழுக்காட்டையும் கொண்டுள்ள ஆங்காங் இந்த நாட்டை விட இரண்டு மடங்கு அதிகமான வெளி வாணிகம் நடத்துகிறது.

நமது பொருளியல் சட்டங்கள் நிலையற்று இருப்பது ஏற்றுமதிக் குறைவுக்கு ஒரு முகாமையான காரணமாகும். 1985-இலும், 88-இலும் வலிவான ஏற்றுமதிக் கொள்கைகள் அறிவிக்கப் பட்டன. ஆனால் இவற்றை மாற்றும் அறிவிப்புகள் அன்றாடம் வெளி வருகின்றன.

குமுகாயச் சீர் குலைவுகள்:

இந்த நாட்டில் இன்று வன்முறை அரியணையில் அமர்ந்திருக்கிறது. குமுகாயவியலுக்கு அடைப்பு (பந்த்) என்ற ஒரு கருத்தை இன்றைய இந்தியா வழங்கியிருக்கிறது. வன்முறையில் ஈடுபடும் குமுகாயப் பகைவர்களால் ஒரு நகரம் முற்றடைப்புக்கு உள்ளாகும் நிலையை இது குறிக்கிறது.

இந்தியக் குடியரசின் வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத அளவு வன்முறை பரவலாகக்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

திரு.க.நகைமுகன் - வெகுமக்கள் சமுதாயக் கட்சி
திரு.முருகு.இராசாங்கம் - மக்கள் பண்பாட்டுக் கழகம்
திரு.மு.தெய்வநாயகம் - திராவிட சமய ஆய்வு இயக்கம்
திரு.வ.செ.குகநாதன் - திரைப்பட இயக்குநர்
திரு.சேவற்கொடியோன் -
திரு.தேனிசை செல்லப்பா - இசைக் கலைஞர்
திரு.கவிஞர் இன்குலாப் - கல்லூரிப் பேராசிரியர்
திரு.முனைவர் கு.இராசேந்திரன் - ,, பேராசிரியர்
திரு.பேரா.முனுசாமி - ,,
பேரா. திருவாட்டி சரசுவதி - ,,
புலவர் திரு. கு.கலியபெருமாள் - மக்கள் போர்
பாவலர் திரு. ப.தண்டபாணி - இசைப்புலவர்
வழக்கறிஞர் செல்வி.அருள்மொழி

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் முதற் கூட்டம் 21-12-90 அன்று மாலை 6 மணிக்கு அமைப்பாளர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் தலைமையில் நடைபெற்றபொழுது கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப் பட்டன.

ஒருங்கிணைப்புக் குழுவின் நோக்கங்களாகக் கீழ்க்காணும் கொள்கைகள் வரையறுக்கப் பட்டன.

1. இலங்கைத் தமிழர் சிக்கல் முற்றிலுமாகத் தமிழீழத் தனிநாடு அமைவது ஒன்றே வழி என்பதில் உறுதியான நம்பிக்கை.

2. தமிழீழத் தேசிய விடுதலை இயக்கமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏற்பிசைவு அளிக்கும்படி இந்திய அரசையும் உலக நாடுகளையும் வற்புறுத்துதல்.

3. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தமிழக மக்களின் முழுமையான ஆதரவைத் திரட்டுதல்.

மேற்கண்ட நோக்கங்களை ஏற்றுக் கொள்ளும் அமைப்புகளையும், ஆதரவாளர்களையும் குழுவில் இணைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

கருத்தரங்குகள்

இறுதியாக சனவரி மாதத்தில் முதலில் சென்னையிலும் பிறகு தமிழ்நாட்டின் முகாமை நகரங்களிலும் தமிழீழ விடுதலைக் கருத்தரங்குகள் நடத்த முடிவு செய்யப்பட்டது.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டு கொள்கிறோம்.

Scanned with CamScanner

தூய பஞ்சாபி மொழிப் போராட்டம்!

பஞ்சாப் மாநிலத்தில் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிலும், மாநில அரசு அலுவலகங்களிலும் தூய பஞ்சாபி மொழிக்கே முன்னுரிமை தர வேண்டும் என்று சீக்கிய தீவிர அமைப்புகள் ஐந்து, அறிக்கை ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளன.

இந்தி, சமசுக்கிருதம் கலப்படமில்லாத தூய்மையான பஞ்சாபி மொழியைத்தான் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கவனமாகக் கையாள வேண்டும் என்றும், அப்படிச் செய்ய, தங்களுக்குப் போதிய பஞ்சாபி மொழியறிவு இல்லையென்றால், பஞ்சாபி மொழியறிஞர்களை அணுக வேண்டும் எனறும் அந்த அறிக்கை கூறுகிறது. பஞ்சாபில் உள்ள வானொலி, தொலைக்காட்சி நிலையங்களில் இந்தி மொழி செலுத்தும் வல்லாளுமையை அகற்ற வேண்டும் என்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

பஞ்சாபி மொழி, பஞ்சாபி கலை, பண்பாடு, கால்சாவின் சிறப்பு ஆகியவற்றை மறைக்கவோ, அழிக்கவோ, முயலும் நடவடிக்கைகளை அரசு அமைப்புகள் உடனடியாகக் கைவிட வேண்டும் என்று அவ்வமைப்புகள் அந்த அறிக்கை மூலம் எச்சரித்துள்ளன.

பஞ்சாப் தொலைக்காட்சி நிலையங்கள் முகாமையான நிகழ்ச்சிகள் பற்றிய எழுத்து விளக்கங்களை இந்தி மொழிக்குப் பகரமாக ஆங்கிலத்தில்தான் இனி ஒளிபரப்ப வேண்டும் என்பதும் அவ்வெச்சரிக்கைகளில் ஒன்றாகும்.

இவ்வெச்சரிக்கைக்கெல்லாம் செவிசாய்க்காத சண்டிகர் வானொலி நிலைய இயக்குநர் தலியை அவ்வியக்கத்தவர்கள் சுட்டுக் கொன்றனர். அவரைக் கொன்றது தாங்கள்தாம் என்றும் அந்த அமைப்பு கூறியது. தனிப்பட்ட முறையில் அவர் மீதோ அவருடைய குடும்பத்தினர் மீதோ தங்களுக்கு வெறுப்பு ஏதும் இல்லையென்றும், இந்தி வல்லாண்மை ஆற்றல்களின் அடையாளக் குறியீடாக அவர் கருதப்பட்டுத் திட்டமிட்டே அவர் கொல்லப் பட்டார் என்றும், இனிமேலாகிலும் வானொலி, தொலைக்காட்சிகளின் ஊழியர்கள் பிறரும் எச்சரிக்கையாக இருந்து பஞ்சாபி மொழி வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்றும் அவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

பஞ்சாபி மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றைப் புறக்கணிக்கும் மேல் அதிகாரிகளின் உத்தரவுகளுக்குக் கீழ்படியக் கூடாது என்றும், அத்தகைய அதிகாரிகளைத் தங்களுடைய அமைப்புகள் ‘உரிய வகையில்’ கவனித்துக் கொள்ளும் என்றும் அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

எந்த மொழி மீதும் தங்களுக்கு வெறுப்பு இல்லை என்றும், பஞ்சாபி மொழியை மதிப்பிழக்க வைக்கும் பார்ப்பனியத்திற்கும், ஆரிய சமாசக் கருத்துகளுக்கும் தக்க எதிரடி தரும் வகையிலேயே தாங்கள் நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அறிககை கூறுகிறது.

‘செய்திகளைத் தரும்போது வானொலியும் தொலைக்காட்சியும் நடுநிலையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று கோரும் அறிக்கை, ‘பஞ்சாப் போராட்டம்’ என்னும் பெயரில் ஒளிபரப்பிய நிகழ்ச்சியில், தீவிரக் கொள்கை அமைப்புகளை அழிவு ஆற்றல்களாக (நாசகார சக்திகளாக) விளக்கப்படுத்தியதல்லாமல், எதிர்த்தரப்பின் கோரிக்கை பற்றிக் கூட முறையாக உண்மைகளைக் கூறாமல் விட்டுவிட்டதைச் சுட்டிக் காட்டியது. இப்படி ஒருதலைப் பக்கமாக நிகழ்ச்சியை உருவாக்கிய நிகழ்ச்சி அமைப்பாளர்களும் ஊழியர்களும் எங்களுடைய சினத்துக்கு இனி இரையாவார்கள் என்றும் அறிக்கை எச்சரிக்கிறது.

‘பஞ்சாபில் உள்ள வானொலி, தொலைக்காட்சி நிலையங்களுக்காக நாங்கள் உருவாக்கியுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் புதுதில்லிக்கும் அனுப்பப்படும். பஞ்சாப் தொடர்பான நிகழ்ச்சி அமைப்பில் தூய்மையான, பிறமொழி கலப்பற்ற பஞ்சாபி மொழியை அவர்களும் பயன்படுத்த வேண்டும். மீறினால் தில்லியில் உள்ள எங்கள் அரிமாக்கள் (சிங்கங்கள்), தொடர்புள்ளவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பார்கள்’ என்றும அந்த அறிக்கை எச்சரிக்கிறது.

‘குர்பானி ஓதும் நேர ஒளிபரப்பை இரட்டிப்பாக்க வேண்டும. தூய்மையான, எளிமையான உருதுமொழியைப் பஞ்சாபியர்கள் கற்றுக் கொள்ள தொடர் நிகழ்ச்சிகளை உருவாக்க வேண்டும். நல்ல தரமுள்ள இந்திமொழி நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பட்டும்; ஆனால், பஞ்சாபி மொழியைப் புறகணிக்கவே கூடாது’ என்று அறிக்கை கட்டளையிடுகிறது.

‘கால்சாவுக்கு எதிராகச் செயல்படும் ஆளுநர் வீரேந்திரவர்மா இனி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வர்மாவின் சொந்த ஊரான சாம்லிக்கு எங்களுடைய ஆள்கள் போய் நோட்டம் பார்த்து விட்டு வந்திருக்கிறார்கள். நாங்கள் நினைத்திருந்தால் அவருடைய உறவினர்களைச் சுட்டுப பொசுக்கியிருக்க முடியும். பெருந்தன்மை காரணமாக சும்மாவிட்டு வைத்திருக்கிறோம். கால்சா எதிர்ப்பைக் கை விட்டு விட்டு ஆளுநர் வர்மா இனி ஆக்க முழுமையாக நடந்து கொள்ள வேண்டும்’ என்றும் அறிக்கை எச்சரிக்கிறது.

—செய்தி. ‘தினமணி’ 13-12-90.

அமெரிக்க மதுவிலக்குத் திட்டம் தோல்வி!

அமெரிக்காவில் மதுப் பழக்கத்தை ஒழிப்பதற்கு 1919-ஆம் ஆண்டு ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இது 'வரட்சிக் கொள்கை' என்று கிண்டலாக அன்று கூறப்பட்டது. 14 ஆண்டுகள் (1919-இலிருந்து 1933 வரை) இத்தடை நடைமுறையில் இருந்தது. 1919-இலிருந்து 1925 வரை ஏறத்தாழ 6 ஆண்டுகள் மதுவின் தீமைகளை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக கோடிக்கணக்கான டாலர்களை அரசு தண்ணீராக வாரி இறைத்தது. நாளேடுகள், தாளிகைகள், திரைப்படம் போன்ற செய்தித் தொடர்புக் கருவிகளில் மதுவின் தீமைகளைக் கருத்துப்பரப்புதல் செய்வதற்காக மட்டும் அன்றைய பொருளியல் சூழ்நிலையில் 6.5 கோடி டாலர்கள் செலவழிக்கப்பட்டன. மதுவிலக்குச் சட்டத்தை ஆதரித்து எழுதப்பட்ட நூல்கள், தாளிகைகள் மற்றும் வெளியீடுகளின் கணக்கை மதிப்பிடும்போது மொத்தம் 90,000 கோடி பக்கங்கள் வரை எழுதப்பட்டதாகப் புள்ளி விளக்கங்கள் கூறுகின்றன. மது விலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக 14 ஆண்டுகளில் அரசுக்கு 45கோடி பவுண்கள் செலவாகியிருக்கின்றன. அக்காலத்தில் அமெரிக்காவின் அறத்துறை சனவரி 1920 முதல் 1933 வரை வெளியிட்ட தாளிகைச் செய்திகளின்படி, மது விலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்தியது தொடர்பாக 200 பேர் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்; 5,34,335 பேர் தளை செய்யப்பட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக ஒரு கோடியே நாற்பது இலக்கம் பவுண்கள் தண்டமாகத் தண்டப்பட்டன. 40 கோடியே 40 இலக்கம் பவுண்கள் பெறுமதிபுள்ள சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறெல்லாம் மதுவிலக்குத் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் கூட, அமெரிக்காவில் மதுவிலக்கை நெடுங்காலம் நடைமுறைப்படுத்த முடியவில்லை. 1933-இல் மதுவிலக்கை அமெரிக்கா முற்றிலுமாகக் கைவிட்டு விட்டது. கோடிகோடி டாலர்கள்—உழைப்புகள்—உயிர்கள் யாவையும் அரசு வீணடித்து, இறுதியில் மதுவுக்குச் சட்ட ஒப்புதலையும் வழங்கிவிட்டது.

இந்தியாவிலும் வெள்ளையர் ஆட்சியின் போது மதுவுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதை எதிர்த்து விடுதலைப் போராட்ட வீரர்களில் சிலர் குரல் கொடுத்தார்கள். முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. மதுக்கடைகள் முன் காந்தியும் இராசாசியும் ஆர்ப்பாட்டம் செய்தனர். மதுவுக்கு எதிராக மறியல் போராட்டத்தில் ஈடுபட மக்களை வேண்டிக் கொண்டனர். இவ்வாறெல்லாம் செய்தும் பிறகு அவர்களின் முயற்சிகள் யாவும் வீணடிக்கப்-

விடுதலைப் புலிகள் மேல் தமிழக அரசு நடவடிக்கை!

கடந்த திசம்பர். 90-இல் விடுதலைப் புலிகள் மேல் தமிழக அரசு எடுத்த நடவடிக்கையின்படி, தமிழீழப் போராளிகளும் அவர்கள் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் மொத்தம் 1966 பேர் தமிழகத்தில் உள்ள பல்வேறு தாவடி(முகாம்)களில் வைக்கப் பெற்றுள்ளனர். அரசின் அறிக்கையின் படி, விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த 418 பேர்களும் அவர்கள் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 204 பேர்களும் வேலூர் சிறப்புத் தாவடிகளிலும், ஈ.பி.ஆர்.எல்.எப், பிளாட், சி.வி.எப், ஆகிய குழுக்களைச் சேர்ந்த 406 பேர்களும் அவர்களின் குடும்பத்தைச்சேர்ந்த 429 பேர்களும் புழல் சிறப்புத் தாவடியிலும், ஈ.என்.டி.எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்த 81 பேர்களும், அவர்களின் குடும்பத்தினர் 47 பேர்களும், சேலம் மாவட்டம் தம்பம்பட்டி சிறப்புத் தாவடியிலும், டெலோ இயக்கத்தைச் சேர்ந்த173பேர்கள் புதுக்கோட்டை சிறப்புத் தாவடியிலும், இவர்களைத் தவிர சென்னை விருகம்பாக்கத்தில்'கந்தா' குழுவைச் சேர்ந்த டெலோ இயக்கத்தினர் 7 பேரும்,கோடம்பாக்கத்தில் ஈராசு குழுவைச் சேர்ந்த ஒருவரும் வைக்கப் பெற்றுள்ளனர்.

இவர்கள் வசதிகளைக் கவனிப்பதற்கு ஒவ்வொரு வட்டாட்சித் தலைவர் மேற்பார்வையாளராக அமர்த்தப் பெற்றிருக்கிறார். தாவடிகளுக்குக் காவல் துறைப் பாதுகாப்பும் தரப் பெற்றுள்ளது.

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகிறது. ஒருவரை ஒருவர் வெறுப்பதற்கு மதம் பயன்படுத்தப் படுகிறது. விரும்புவதற்கு அது பயன்படுத்தப் பெறுவதில்லை.

அரசியல் நிலை இழிவானது:

திறமையும், தொலைநோக்கும்,அறிவும், பணிவும் நிறைந்த சான்றோர்கள் அரசியலில் ஈடுபட்டிருக்கவில்லை, இன்றைய இழிவான, கீழ்த்தரமான அரசியலில் அவர்கள் வெற்றி பெறக் கூடிய வாய்ப்பே இல்லை. இதுதான் இன்றைய இந்தியாவின் மிகப்பெரிய சிக்கல். இன்றைய அரசியலில் சாதிதான் உதைபந்தாகப் பயன்படுத்தப் படுகிறது.

(இக் கட்டுரை, இந்தியாவின் சிறந்த வழக்கறிஞர் **நானி.ஏ. பால்கிவாலா** அவர்கள், கேம்பிரிட்சு டிரினிட்டி கல்லூரியில் சென்ற 90, நவம்பர் மாதம் நிகழ்த்திய சொற்பொழிவின் முகாமைக் கருத்துகளை உள்ளடக்கியது. அடிப்படை தினமணி 7-12-90.)

(முன் பத்தி தொடர்ச்சி)

பட்டன. காந்தியக் கருத்தை ஆதரிப்பவர்களே இந்திய விடுதலைக்குப் பிறகு பல மாநிலங்களில் மதுவுக்கு முழு அனுமதி வழங்கி விட்டார்கள். மதுவை 'தேசியக் குடிப்பாகவே' அறிமுகப்படுத்தி வருகிறார்கள். —நன்றி. **சமரசம்: 1-12-90**

Scanned with CamScanner

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்!

பெரியார் மாவட்ட 2-ஆவது மாநாடு!

பாவேந்தர் நூற்றுண்டு விழா!

17-2-91 ஞாயிறு-அசந்தா உணவக அரங்கு.

காலே 10 மணி அளவில் தொடக்கம்!

பாவலர் அரங்கம், இளேயோர்-மகளிர் அரங்கம்,
பாராட்டரங்கம், அறிஞர் அரங்கம்!

பங்கேற்போர்.

பாவலரேறு பெருஞ்சித்திரனுர் (முதல்வர் உ.த.மு.க.)

சொல்லாய்வறிஞர் ப.அருளி (தொகுப்பாசிரியர், தூயதமிழ் அகரமுதலி. தமிழ்ப் பல்கலேக்கழகம்)

வழக்கறிஞர் தி.மு.இராமதாசு (நெறியாளர் தமிழின விடுதலேக் கழகம்.)

பறம்பை அறிவன் (துணேப்பொதுச் செயலர் உ.த.மு.க.)

பாவலர் அரு. கோபாலன் (ஆசிரியர் எழுகதிர்)

பாவேந்தர் இராமலிங்கம்.

பேரா: உ.பாலசுப்பிரமணியம்.

பேரா: கா.அரங்கச் செல்வனுர்.

புலவர். பொதிகைச் செல்வனுர்.

மற்றும்: பாவலர்கள்; கொ.செ. சின்னப்பனுர், தமிழ்க் குமரன், செந்தமிழ்ச் செல்வன், அரங்கநாதன்!
அரங்கராசன், முத்து வள்ளியம்மை, தமிழப்பன், பாவைநடவரசன்.

அனேவரும் வருக! அரும்பயன் பெறுக!

தி.மு. அரசமாணிக்கனுர்.
அமைப்பாளர். உ.த.மு.க. பெரியார் மாவட்டம்.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலேக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்த்வுமான அருவருப்பற்ற கலே வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனேக்கு-60

அரசியல் என்பது அறவியல் தழுவியதாய் இருத்தல் வேண்டும். இல்லெனில் அது கொடுங்கோல் ஆகிவிடும்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 143

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணுசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னே-5

தொலேபேசி எண்: 847829

உறுப்பினா:

தனி இதழ் விலே	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

தமிழர் ஒவ்வொருவரும்
கட்டாயம் படிக்க வேண்டிய
இதழ்கள்! தமிழ்நிலம்,
தென்மொழி. தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனுர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணுசலத் தெரு, சென்னே-5.

TN/MS(C)- 651